**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை – 600 006**

**ந. க. எண். 14813 / அ4 / இ1 / 2021, நாள். 06 .05.2021.**

*****

**பொருள்:** பள்ளிக் கல்வி – 2012 – 2013 ஆம் ஆண்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் – நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டது – 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்பட்ட பணியிடங்கள் சார்பாக காலிப் பணியிட விவரங்கள் கோருதல் – சார்பு.

**பார்வை:**

1. அரசாணை (நிலை) எண்.277, பள்ளிக் கல்வி (சி2) துறை நாள்.3.10.2012.
2. அரசுக் கடிதம் எண்.6150/பக4(1)/2018, நாள்.24.05.2018.
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.6743/எல்/இ3/2021,நாள்.23.04.2021.

*******

பார்வை 1ல் காணும் அரசாணையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2012-2013 ஆம் ஆண்டில் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கு 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் தற்காலிகப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, அப்பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்பட்டது. 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு 01.04.2021 முதல் மூன்று ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு கோரி அரசுக்கு கருத்துரு பணிந்தனுப்பப்பட்டதில், பார்வை 2ல் காணும் அரசுக் கடிதத்தில் கீழ்க்காணும் கூடுதல் தகவல்கள் கோரப்பட்டுள்ளதாக பார்வை 3ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்க்காணும் கூடுதல் விவரங்களை உடன் அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண். | மாவட்டம் | பள்ளி / அலுவலகத்தின் பெயர் | 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்களில் நிரப்பப்பட்டுள்ள பணியிடங்கள் எத்தனை மற்றும் காலிப் பணியிடங்கள் எத்தனை எந்த தேதி முதல் காலியாக உள்ளது என்ற விவரம். | மூன்றாண்டுகளுக்கு மேலாக காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்கள் விவரம். | புத்தாக்கம் செய்யப்பட வேண்டிய காலிப் பணியிடங்கள் எத்தனை என்ற விவரம். | காலிப் பணியிடங்களில் தற்போதைய தேவை குறித்தும், உபரி பணியிடங்களாக உள்ள காலிப் பணியிடங்களை சரண் செய்வது குறித்தும் விரிவான அறிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

மேற்காண் விவரங்களை உடன் அரசுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால், இதில் தனிக்கவனம் செலுத்தி மேற்காண் படிவத்தில் பூர்த்தி செய்து உடன் அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

6/5/2021

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்

கண்காணிப்பாளர்,
'எல்' பிரிவு.